அ.வ.எண். : 171/2010

வா.சா. : 2

பெயர் : திரு. ஸ்ரீனிவாச ரெட்டி

தேதி : 10.03.2020

**குறுக்கு விசாரணை :** லட்சுமம்மா என் தாயார் என்றால் சரிதான். அவர் தற்போது உயிருடன் உள்ளார் என்றால் சரிதான். ஏன் அவர் சாட்சியம் அளிக்க வரவில்லை என்றால் என் பெரியம்மா சாட்சியம் அளித்துவிட்டதால் அவர் அளிக்கவில்லை. எனக்கு வயது என்னவென்றால் 45. அதற்கு ஆதாரம் உள்ளதா என்றால் ஆதார் கார்டு உள்ளது. எனக்கு 55 வயதிருக்கும் என்றால் சரியல்ல. 15.04.1974-ல் பிறந்தேன். நான் பொய்யாக கூறுகின்றேன் என்றால் சரியல்ல. வழக்கு விவரம் தெரியுமா என்றால் தெரியும். வழக்கை முதலில் யாரிடம் கொடுத்தேன் என்றால் பெயர் நியாபகமில்லை. நோட்டீஸ் அனுப்பியது ஒருவர். வழக்கு போட்டது ஒருவர். தற்போது நடத்துபவர் ஒருவர் என்றால் சரிதான். என் அம்மாவிற்கு 75 வயதிருக்குமா என்றால் இருக்கும். என் அம்மாவிற்கு பிரதிவாதிகளுக்குள் பாகம் ஆனது தெரியுமென்றும் அதனால்தான் சாட்சியம் அளிக்க வரவில்லை என்றால் என் அம்மாவிற்கு தெரியாது. என் தாத்தா நரசிம்மரெட்டி எப்போது இறந்தார் என்றால் 06.09.2006-ல் இறந்தார். இறப்பு சான்று வாங்கினோமா என்றால் இல்லை. அவர் 01.08.2006-ல் இறந்தார் என்றும் நான் தவறாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. எனக்கு தெரிந்தவரை 06.09.2006-ல் தான் இறந்தார். நான் 11-ம் வகுப்பு வரை படித்துள்ளேன். கிருஷ்ணாரெட்டி மற்றும் அவரது அண்ணனுக்கு பாத்தியப்பட்ட அனைத்து சொத்துக்கள் பற்றி எனக்கு தெரியுமா என்றால் 3 சொத்துக்கள் பற்றி மட்டும் தான் எனக்கு தெரியும். மற்ற சொத்துக்கள் பற்றி எனக்கு தெரியாது. நான் சித்தனப்பள்ளயில் வசிக்கிறேன். என் ஊரிலிருந்து தாவா சொத்துக்கள் இருக்கும் ஊர் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 14 கி.மீ. தூரம் இருக்கும். நடந்து போக குறுக்கு வழி உண்டு. வழக்கில் போட்டுள்ள சர்வே எண் தெரியுமா என்றால் தெரியும். அந்த சர்வே எண்ணில் பம்ப்செட் கிணறு, போர்வெல் இருந்ததா என்றால் பம்ப் செட், கிணறு இருந்தது. சர்வே எண் 869/2பி-ல் இருந்தது. அடங்கல் ஏதாவது ஆஜர் செய்தேனா என்றால் இல்லை. சொத்தை பார்த்து 25 வருடங்கள் ஆகியிருக்குமா என்றால் 18 வருடங்கள் ஆகியிருக்கும். கிருஷ்ணாரெட்டி ஒரு பாகமும், அவருடைய இறந்துபோன அண்ணன்

குடும்பத்தார் ஒரு பாகமும் தனித்தனியாக விவசாயம் செய்து வந்தார்கள் என்றால் சரிதான். என் அம்மாவிற்கும் பெரியம்மாவிற்கும் கொஞ்சம் நிலம் விட்டிருந்தார்கள். எவ்வளவு விஸ்தீரணம் எந்த சர்வே எண்ணில் ஒதுக்கியிருந்தார்கள் என்றால் தெரியாது. இந்த வழக்கில் என் அம்மாவிற்கும் பெரியம்மாவிற்கும் நிலம் ஒதுக்கியது பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட பதிலுரையை பற்றி தெரியுமா என்றால் தெரியாது. 20.12.1984-ல் கிருஷ்ணாரெட்டிக்கும் அவருடைய அண்ணன் ராமரெட்டி குடும்பத்தாருக்கும் இடையே ஒரு பாகப்பிரிவினை பத்திரம் ஏற்பட்டது தெரியுமா என்றால் தெரியாது. என் தாத்தா உயிருடன் இருக்கும்போது அதை பற்றி கூறவில்லை. எதிர்தரப்பிற்கு நாங்கள் நோட்டீஸ் அனுப்பிய பின்பு அவர்கள் பதிலறிவிப்பு கொடுத்தார்கள் என்றால் சரிதான். இன்றைய தேதிவரை சொத்திற்கு வில்லங்க சான்று போட்டு பார்த்தேனா என்றால் இல்லை. 17.03.2014-ல் 1, 2 பிரதிவாதிகள் மற்றும் ஒரு நாகராஜ் இடையே பரிவர்த்தனை பத்திரம் ஏற்பட்டுள்ளது பற்றி தெரியுமா என்றால் தெரியாது. சொத்துக்கு வருவாய் ஆவணங்கள் யார் பெயரில் உள்ளது என்றால் தாத்தா பெயரில் உள்ளது. பட்டா தற்போது கிருஷ்ணாரெட்டி, கௌரம்மாள் மற்றும் அவர் குடும்பத்தார் பெயரில் உள்ளது என்றால் வழக்கு போட்ட பிறகு தான் தெரியும். தெரிந்தபிறகு அந்த ஆவணங்களை பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. கிருஷ்ணாரெட்டியும் கௌரம்மாவும் தனித்தனி வீட்டில்தான் உள்ளார்கள் என்றால் சரிதான். எனக்கு நினைவு தெரிந்தது முதல் தனித்தனியாகத்தான் உள்ளார்கள். சொத்தில் வரும் வருமானத்தை அவரவரே அனுபவிக்கிறார்கள் என்றால் சரிதான். நாங்கள் போனால் ராகி, அரிசி ஆகியவற்றை கொடுப்பார்கள். பிரதிவாதிகளுக்குள் பாகம் ஆகிவிட்டது என்றும் தற்போது என் அம்மாவோ, பெரியம்மாவோ சொத்தில் பாகம் கேட்கமுடியாது என்றால் சரியல்ல. என் அம்மாவிற்கும் பெரியம்மாவிற்கும் திருமணம் ஆகும்போதே அனைத்து சீரும் செய்யப்பட்டு விட்டது என்றால் எதுவும் கொடுக்கவில்லை என்று அவர்கள் கூறினார்கள். எனக்கு வழக்கு விவரம் தெரியாது என்றும் வாதிகளுக்கு எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றால் சரியல்ல.